# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:122:2016 நாள்: 22.03.2016

அன்பார்ந்த தோழர்களே,

## சிறப்பு உதவியாளர் பதவிகள்

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்திற்கும் வங்கி நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் 6 சிறப்பு உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்று நிர்வாகம் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது:

| எண். | கிளை | பிராந்தியம் |
|---|---|---|
| 1. | செட்டிகுளம் | கோவை |
| 2. | வால்பாறை | கோவை |
| 3. | காரையூர் | மதுரை |
| 4. | நன்னிலம் | மதுரை |
| 5. | திருச்சிற்றம்பலம் | மதுரை |
| 6. | நாகபட்டினம் | மதுரை |

தகுதியும் விருப்பமும் உள்ள தோழர்கள், தங்களது விண்ணப்பங்களை 29.03.2016க்கு முன்பாக சென்னை பிராந்திய அலுவலகத்திற்கு கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பினாலும், மின்னஞ்சல் மூலம் ஒரு நகலை சென்னை பிராந்திய அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதன் மூலம், உங்கள் விண்ணப்பம் சென்றடைவதை உறுதி செய்யலாம். எனவே அனைத்து தோழர்களும் hrmnrochennai@unionbankofindia.com என்ற முகவரிக்கு ஒரு நகலை அனுப்பிவைக்கவும்.

கீழ்க்கண்ட ஊழியர்களுக்கு இடமாற்றல் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்:

| எண். | பெயர் | தற்போதுள்ள கிளை | புதிய கிளை |
|---|---|---|---|
| 1. | தோழர்.**செல்வகுமார்**<br>சிறப்பு உதவியாளர் | அழகர்கோவில் சாலை<br>(Order to பேரையூர்) | மதுரை நகரம் |
| 2. | தோழர். **L.S.சுஜித்**<br>சிறப்பு உதவியாளர் | குன்னூர்<br>(Order to நாகபட்டினம்) | பேரையூர் |
| 3. | தோழியர்.**A.சண்முகப் பிரியா**<br>சிறப்பு உதவியாளர் | கீராம்பூர்<br>(Order to செட்டிகுளம்) | திருச்சி நகரம் |
| 4. | தோழர்.**நிர்மல் குரு**<br>சிறப்பு உதவியாளர் | திருச்சிற்றம்பலம் | நடுகாவேரி |
| 5. | தோழியர்.**மாரியம்மாள்**<br>துணைநிலை ஊழியர் | வடகரை | தூத்துக்குடி |

இதன் பின், காலியாகவுள்ள காசாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, தகுதியான தோழர்கள் நியமிக்கப்படுவர். இவை அனைத்தும், புதிய எழுத்தர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்பாக நிறைவு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

## தொழிலுறவுக் கூட்டங்கள்

மார்ச் 2016 காலாண்டிற்கான பிராந்திய தொழிலுறவுக்கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. எனவே, தோழர்கள் இக்கூட்டங்களில் விவாதிப்பதற்கு தங்களது ஆலோசனைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வரும் ஏப்ரல் மாதத்தில் புதிய எழுத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அதற்கு முன்பாக சிறப்பு உதவியாளர், காசாளர் பணியிடங்களுக்கு தோழர்கள் நியமிக்கப்படவுள்ளனர். ஏற்கனவே இடமாற்றல் உத்தரவு பெற்றுள்ள தோழர்கள் பற்றிய விவரங்கள் சங்கத்தில் உள்ளது. இருந்தாலும், நமது தோழர்கள் அந்த விவரங்களை சங்கத்திற்கு தெரிவித்தால், ஏதும் விடுபடாமல் அனைத்து ஊழியர்களையும் விடுவிக்க உதவியாக இருக்கும்.